**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.4, SALEM.**

**Present: S. Poovaragavan,B.A.,LL.B.,**
**Judicial Magistrate No.IV, Salem.**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 226/2024 |
| Deposition of witness for Prosecution<br><br>Defence<br>Court | PW : 4 (Lw: 9)<br>DW : |
| Name: | திரு. தமிழ்ச்செல்வன் |
| Father's/Husband Name: | த/பெ . சின்னப்பன் |
| Village: | |
| Taluk: | |
| Age: | |
| The Oath was administered to the witness by Mrs. Menaka, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 14.05.2026 | |

Accused present. Learned APP Mrs. Punitha engaged in DM cum JM Yercaud. Counsel for the accused Mr. R.Ranganathan for Counsel Mr.Sankar Present. Witness produced and identified by Mr. Ganapathy HC-977.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 01.46 PM**

**முதல் விசாரணை –**

1. நான் மேட்டுப்பட்டி தாதனூரில் குடியிருந்து பஞ்சாயத்து தலைவராக இருந்து தற்போது பதவிக்காலம் முடிவடைந்துவிட்டது. கடந்த 07.02.2022ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் தேவாங்கர் காலனி பேருந்து நிறுத்தத்திற்கு அருகே உள்ள தேநீர் கடையில் நானும் அப்போது

துணைத் தலைவராக இருந்த ரமேஷ் என்பவரும் தேநீர் அருந்திக்கொண்டிருந்தோம். அப்போது, திடீரென சத்தம் கேட்டது. திரும்பி பார்த்தபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் பஜாஜ் மற்றும் TVS வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

2. நாங்கள் இருந்த இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் 20 முதல் 30 அடி தூரம் இருக்கும். உடனே அருகில் சென்று பார்த்தபோது 3 பேருக்கு அடிபட்டிருந்தது. யார் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று தெரியவில்லை. பின்னர், ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். 6 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டதால் மற்ற விவரங்கள் எனக்கு நினைவில் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

3. **நீதிமன்றக் கேள்வி: (இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 165ன் கீழ்):** தங்களை யாரும் இவ்வாறு தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியோ அல்லது அச்சுறுத்தல் செய்தார்களா? அவ்வாறு ஏதும் நடக்கவில்லை. நான் நடந்தவற்றை தான் சாட்சியம் அளிக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. சத்தம் கேட்டுதான் திரும்பிப்பார்த்தேன் என்றாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யார் மேல் தவறு என்று தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு வண்டி மோதிக்கொண்டது என்றுதான் தெரியும்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்: 01.55 PM**

Taken down before me in Open Court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- S. Poovaragavan

Judicial Magistrate No.IV, Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT NO.4, SALEM.**

**Present: S. Poovaragavan,B.A.,LL.B.,**
**Judicial Magistrate No.IV, Salem.**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | CC. No. 226/2024 |
| Deposition of witness for Prosecution<br><br>Defence<br>Court | PW : 5 (Lw: 10)<br>DW : |
| Name: | திரு. ரமேஷ் |
| Father's/Husband Name: | த/பெ . கலியமூர்த்தி |
| Village: | |
| Taluk: | |
| Age: | |
| The Oath was administered to the witness by Mrs. Menaka, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 14.05.2026 | |

Accused present. Learned APP Mrs. Punitha engaged in DM cum JM Yercaud. Counsel for the accused Mr. R.Ranganathan for Counsel Mr.Sankar Present. Witness produced and identified by Mr. Ganapathy HC-977.

**விசாரணை தொடங்கப்பட்ட நேரம்: 01.55 PM**

**முதல் விசாரணை –**

1. நான் தேவாங்கர் காலனியில் குடியிருந்து பஞ்சாயத்துத் துணைத் தலைவராக இருந்து தற்போது பதவிக்காலம் முடிவடைந்துவிட்டது. கடந்த 07.02.2022ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் தேவாங்கர் காலனி பேருந்து நிறுத்தத்திற்கு அருகே உள்ள தேநீர் கடையில் நானும் அப்போது தலைவராக இருந்த தமிழ்ச்செல்வன் என்பவரும் தேநீர் அருந்திக்கொண்டிருந்தோம். அப்போது,

திடீரென சத்தம் கேட்டது. திரும்பி பார்த்தபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் பஜாஜ் மற்றும் TVS வாகனங்கள் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது.

2. நாங்கள் இருந்த இடத்திற்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் 20 முதல் 30 அடி தூரம் இருக்கும். உடனே அருகில் சென்று பார்த்தபோது 3 பேருக்கு அடிபட்டிருந்தது. யார் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று தெரியவில்லை. பின்னர், ஆம்புலன்ஸ்க்கு தகவல் தெரிவித்து அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். முனியப்பன் என்பவருக்கு பின் தலையில் அடிபட்டு நினைவு இல்லாமல் இருந்தார். சண்முகம் என்பவருக்கு இடது புருவம் மற்றும் கன்னம் மற்றும் இரண்டு கால்களிலும் காயம் ஏற்பட்டது. மேலும் ஒருவருக்கும் காயம் ஏற்பட்டது. 6 வருடங்களுக்கு மேல் ஆனதால் குறிப்பிட்டு எனக்கு நினைவில் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**நீதிமன்றக் கேள்வி: (இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 165ன் கீழ்):**

3. தங்களை யாரும் இவ்வாறு தான் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தியோ அல்லது அச்சுறுத்தல் செய்தார்களா? அவ்வாறு ஏதும் நடக்கவில்லை. நான் நடந்தவற்றை தான் சாட்சியம் அளிக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

4. சத்தம் கேட்டுதான் திரும்பிப்பார்த்தேன் என்றாலும் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். யார் மேல் தவறு என்று தெரியுமா என்றால் தெரியாது. இரண்டு வண்டி மோதிக்கொண்டது என்றுதான் தெரியும்.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம்: 02.05 PM**

Taken down before me in Open Court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/- S. Poovaragavan

Judicial Magistrate No.IV, Salem.